தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| --- | --- |
| திகதி | 2023.09.15 |

**பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது – பரஸ்பர மதிப்பீட்டு தயார்படுத்தல் பற்றிய விளக்கமளித்தலும் செயலமர்வும் (2023 செத்தெம்பர் 6-8)**

இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பு பற்றிய எதிர்வருகின்ற பரஸ்பர மதிப்பீடு தொடர்பில் உள்நாட்டு அதிகாரிகளுடன் ஈடுபடுவதற்கும் முக்கிய உள்நோக்குகளை அவர்களுக்கு வழங்குவதற்கும், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தலிருந்து உயர்மட்ட பேராளர் குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. பன்னாட்டு பேராளர் குழு பின்வருவோரை உள்ளடக்கியிருந்தது:

- திரு. ஜுலியன் ப்ராஸோ: ஆசிய பசுபிக் குழுமத்தின் இணைத் தலைவர் மற்றும் நிதியியல் துறை கொள்கை கிளையினுள் ஒட்டாவாவிலுள்ள கனடாவின் நிதித் திணைக்களத்தின் இணை உதவி பிரதி அமைச்சர்.
- முனைவர். கோடன் ஊக்: நிறைவேற்று செயலாளர், ஆசிய பசுபிக் குழுமம்
- திரு. டேவிட் ஷனோன்: பணிப்பாளர், பரஸ்பர மதிப்பீட்டு தரம் மற்றும் ஒத்திசைவு, ஆசிய பசுபிக் குழுமம்

நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பிரதான பிராந்திய கண்காணித்தல் நிறுவனங்களுள் ஒன்றான ஆசிய பசுபிக் குழுமமானது பணம்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் பேரழிவு ஆயுதங்களுடன் தொடர்புபட்டு ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலுக்கான பன்னாட்டு தரநியமங்களை செயற்றிறன்வாய்ந்த விதத்தில் நடைமுறைப்படுத்துவதில் உறுப்பு நாடுகளைக் கண்காணித்து வழிகாட்டுவதற்கு அர்ப்பணித்துள்ளது. நிதியியல் நடவடிக்கை செயலணியின் மேற்பார்வையின் கீழ் ஒன்பது பிராந்திய நிறுவனங்களுடன் ஏறத்தாழ 200 நாடுகள் இணையப்பெற்றுள்ளன. 1997இலிருந்து, இலங்கை ஆசிய பசுபிக் குழுமத்தின் 13 தாபக உறுப்பினர்களில் ஒன்றாக இருந்து வருகின்றது.

நிதியியல் நடவடிக்கைச் செயலணியானது பணம்தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தலுக்கெதிராக உலகளாவிய காவலராகப் பணியாற்றி, இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் அவை சமூகத்திற்கு ஏற்படுத்தும் தீங்குகளைத் தடுப்பதை இலக்காகக் கொண்டு பன்னாட்டுரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களை நிர்ணயிக்கின்றது. உறுப்பு நாடுகள் இந்நியமங்களை கடைப்பிடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதுடன் நிதியியல் நடவடிக்கைச் செயலணி இரு முக்கியப் பரிமாணங்களை உள்ளடக்குகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டு முறையியலின் அடிப்படையில் அந்நாடுகளின் செயலாற்றத்தை மதிப்பிடுகின்றது:

1. தொழில்நுட்ப இணங்குவித்தல்: சட்டரீதியானதும் நிறுவனம்சார் கட்டமைப்பை அதேபோன்று தேர்ச்சிப்பெற்ற அதிகாரிகளின் அதிகாரம் மற்றும் நடைமுறைகளை மதிப்பீடுசெய்கின்றது.
2. செயற்றிறன்மிக்க மதிப்பீடு: சட்டம் மற்றும் நிறுவனம்சார் கட்டமைப்பு எந்த அளவிற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை உருவாக்குகின்றது என்பதை அளவிடுகின்றது.

2011 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில், நிதியியல் நடவடிக்கைச் செயலணி முறையே அதன் 1ஆவது மற்றும் 2ஆவது பரஸ்பர மதிப்பீடுகளில் இருமுறை அதன் பணம் தூயதாக்கலுக்கெதிரான /பயங்கராவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலில் மூலோபாய குறைபாடுகளைக் கொண்ட ‘‘சாம்பல் நிறப்பட்டியல்’’ நாடாக இலங்கை இனங்காணப்பட்டது. 2017 சாம்பல் நிறப்பட்டியல் காலப்பகுதியின் போது, இப் பன்னாட்டு நியமங்களுடன் இணங்கமைக்காக ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையை ‘‘கறுப்புப் பட்டியலில்’’ சேர்த்தது. 2019ஆம் ஆண்டில், சட்ட மற்றும் நிறுவனம்சார் கட்டமைப்பிலுள்ள இடைவெளிகளை தீர்த்ததன் பின்னர் இலங்கை சாம்பல் நிறப்பட்டியலிலிருந்து வெளியேற இயலுமாகவிருந்தது.

இலங்கையின் மூன்றாவது பரஸ்பர மதிப்பீடு 76 வாரங்களில் (2025 மாச்சு) இடம்பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நாடு என்ற வகையில், இலங்கை நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் 40 பரிந்துரைகளுடன் தொழில்நுட்பரீதியில் இணக்கத்தை அடைந்துள்ளதையும் நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் 11 உடனடிப் பெறுபேறுகளினால் அளவிடப்பட்டவாறு எமது பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பானது எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை வழங்குகின்றது என்பதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். இந்நோக்கில், நாட்டில் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தலை ஒழித்தலில் 24 ஆர்வலர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர். முயற்சிகளை ஒருங்கிணைக்கும் மையப் புள்ளியாக நிதியியல் உளவறிதல் பிரிவானது பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பில் இனங்காணப்பட்ட இடைவெளிகளை தீர்ப்பதை இலக்காகக்கொண்டு, ஆர்வலர்களுக்குரிய நடவடிக்கைத் திட்டங்களுக்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுள்ளது.

3-நாள் விஜயத்தின் போது, அதிமேதகு சனாதிபதி, கௌரவ. பிரதம நீதியரசர், உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள், வெளிநாட்டு அமைச்சர், சட்டமா அதிபர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்/பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய தேசிய ஒருங்கிணைப்பு குழுத் தலைவர், மூத்த சட்ட அமுல்படுத்தல் அதிகாரிகள், ஆகியோருடன் தனியார் மற்றும் ஏனைய முக்கிய ஆர்வலர்கள் உள்ளடங்கலாக இலங்கையில் முக்கிய ஆட்களுடன் பேராளர் குழு சிறந்த சந்திப்பை மேற்கொண்டது.

இலங்கையின் தலைமைத்துவத்தின் உயர் மட்டத்தில், எதிர்வரும் பரஸ்பர மதிப்பீட்டின் முக்கியத்துவத்தின் ஆழமானப் புரிந்துணர்வு காணப்படுகின்றதுடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முறைமையின் தாக்குபிடிக்கும் தன்மையை எடுத்துகாட்டுகின்ற வலுவான பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு அனைத்து ஆர்வலர்களும் அர்ப்பணிப்புடன் இருப்பது இன்றியமையாதது எனப் பேராளர் குழு அவதானத்தை

செலுத்தியது. இலாபத்தால் தூண்டப்படும் குற்றங்கள், பயங்கரவாதம் மற்றும் பேரழிவு ஆயுதங்களின் ஆயுதப்பெருக்கு என்பனவற்றிலிருந்து எமது பொருளாதாரத்தையும் சமூதாயத்தையும் பாதுகாப்பதற்கு மேம்படுத்தப்பட்ட செயற்றிறனுக்கான நிதியியல் நடவடிக்கைகளின் செயலணியின் நியமங்களை நடைமுறைப்படுவத்துவது அடிப்படையாக காணப்படுகின்றது. பயங்கரவாதம், பயங்கரவாதிக்கு நிதியளித்தல், போதைப்பொருள் கடத்தல், ஊழல், வர்த்தகத்துடன் தொடர்புடைய குற்றங்கள் மற்றும் பணம் தூயதாக்கல் உள்ளடங்கலாக ஏனைய இலாபத்தை ஈட்டும் குற்றவியல் நடவடிக்கைகள் காரணமாக நாட்டிற்கு ஏற்படும் கடுமையான செலவுகள் குறித்து இலங்கை நன்கு அவதானத்துடன் உள்ளது. பரஸ்பர மதிப்பீட்டிற்காக வெற்றிகரமாக தயாராகுவதற்கும் நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் சாம்பல்நிறப் பட்டியலிடலின் மோசமான பொருளாதார விளைவுகளை தவிர்ப்பதற்கும், பின்வரும் ஒழுங்கில் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளிப்பது மிகவும் முக்கியமானதாகும்:

1. **செயல்திறன்வாய்ந்த தன்மையில் கவனத்தைசெலுத்துதல்:** இலங்கையின் குறிப்பான இடர்நேர்வுகளை காத்திரமிக்க விதத்தில் தீர்க்கின்ற தொழிற்பாட்டுரீதியான பெறுபேறுகளை உருவாக்குவதற்கு பணம்தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முறைமையின் ஆற்றலினை வலியுறுத்துதல்
2. **மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு:** முன்னுரிமை நடைமுறைப்படுத்தல் திட்டங்களின் முன்னேற்றத்திற்கு ஆதரவளிப்பதற்கும் செயற்றிறனுக்கான ஏதேனும் தடைகளை முறியடிப்பதற்கும் ஆர்வலர்கள் முன்னேற்ற மற்றும் தொழிற்பாட்டு விளைவுகளின் கண்காணிப்பை தீவிரப்படுத்தல் வேண்டும்.
3. **உரிய கால சட்டவாக்கம்:** தொழிற்பாட்டு பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு தேவையான கருவிகள் கிடைப்பதை உறுதிசெய்வதற்கு முக்கியமான பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான சட்டவாக்கத்திற்கான வழிமுறைகளை விரைவுபடுத்தல்.
4. **மூலவளத்தை ஒதுக்கீடுசெய்தல்:** தொழிற்பாட்டுரீதியான விளைவுகளை உரிய காலத்தில் அடைவதை வசதிப்படுத்தவதற்கு பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள முகவராண்மைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் போதியளவு மூலவளங்களை ஒதுக்கீடுசெய்தல்.
5. **முகவராண்மைக்கிடையிலான ஒருங்கிணைப்பு:** நடைமுறைப்படுத்தல் திட்டங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் இலக்கிடப்பட்ட திட்டமிடல் மற்றும் முன்னேற்ற கண்காணிப்பிற்கான காத்திரமான தலைமைத்துவம் மற்றும் நன்கு ஆதரவளிக்கப்படும் பொறிமுறைகளினூடாக முகவராண்மைக்கிடையிலான ஒருங்கிணைப்பை நிலைநிறுத்துதல்.
6. **வழக்குத்தொடுத்தல்:** பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் வழக்குகளில் வழக்குத்தொடுநர்களின் இயலாற்றலையும் முனைப்பான ஈடுபாட்டையும் மேம்படுத்துதல்
7. **சட்டத்தை அமுலாக்குதல்:** குறிப்பாக முடிவுறாதுள்ள பணம் தூயதாக்கல் வழக்குகளை அப்புறப்படுத்துதல் மற்றும் சொத்து மீட்பு நோக்கெல்லை மற்றும் பணம் தூயதாக்கலுடன்

தொடர்புடைய நடவடிக்கைகளை அதிகரித்தல் என்பவற்றினூடாக சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளின் மூலம் நடைமுறைப்படுத்தலை மேம்படுத்தல்

8. **நீதித்துறை:** பணம் தூயதாக்கல் வழக்குகளையும் பயங்கரவாத நிதியளித்தல் வழக்குகளையும் உரிய காலத்திலும் செயல்திறன்வாய்ந்த விதத்திலும் தீர்ப்பதற்கு நீதித்துறை இயலாற்றலை மேம்படுத்துதல்

9. **தனியார் துறை ஈடுபாடு:** பணம்தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் முறைமைகளின் முன்னுரிமை நடைமுறைப்படுத்தலுக்கு தனியார் துறையின் முனைப்பான ஈடுபாட்டை ஊக்குவித்து அரசாங்கத்துடன் பகிரப்பட்ட இலக்குகளைப் பேணிவளர்த்தல்.

10. **பன்னாட்டு ஒருங்கிணைப்பு:** பன்னாட்டு ஒருங்கிணைப்பு தொடர்பில் வலுப்படுத்தி கவனம்செலுத்துதல், செயற்றிறன் வாய்ந்த தன்மையை எடுத்துக்காட்டும் அதன் முக்கிய வகிபாகத்தை அங்கீகரித்தல். முக்கிய பணம்தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகளை பகிருகின்ற நாடுகளுடன் விரிவான கூட்டிணைவை பேணிவளர்த்தல்

இம்முன்னுரிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை உரிய விழிப்பு கவனத்துடன் கடைப்பிடிப்பதன் மூலம், இலங்கை அதன் பரஸ்பர மதிப்பீட்டில் சாதகமான பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் அத்துடன் நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் சாம்பல் நிறப்பட்டியலுடன் இணைந்த பாதகமான பொருளாதார மற்றும் நிதியியல் விளைவுகளை தவிர்க்கலாம். ஆகையினால், நாட்டின் மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டை எதிர்கொள்ளும் வகையில், பணம்தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பிலுள்ள இடைவெளிகளை உரிய கால விதத்தில் நிவர்த்திசெய்வதற்கு 24 ஆர்வலர்கள் ஒவ்வொருவரும் தமது இயலாற்றலுக்குள் சாத்தியமான அனைத்து முயற்சியையும் மேற்கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.



***அமர்ந்திருப்போர் - இடமிருந்து வலம்:*** முனைவர். கோடன் ஊக், நிறைவேற்று செயலாளர்/ஆசிய பசுபிக் குழுமம், முனைவர். நந்தலால் வீரசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்/பணம்தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலில் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், திரு. ஜுலியன் ப்ராஸோ, ஆசிய பசுபிக் குழுமத்தின் இணைத் தலைவர், ஒட்டாவிலுள்ள நிதியியல் துறை கொள்கை கிளையின் கனடா நிதித் திணைக்களத்தின் இணை உதவிப் பிரதி அமைச்சர், திரு.டேவிட் ஷனோன், பணிப்பாளர் - பரஸ்பர மதிப்பீடுகள் தரம் மற்றும் ஒத்திசைவு, ஆசிய பசுபிக் குழுமம்.



***நிற்போர் - இடமிருந்து வலம்:*** முனைவர். அயேஷ் ஆர்யசிங்க, மேலதிகப் பணிப்பாளர்/நிதியியல் உளவறிதல் பிரிவு, திருமதி நெலுமனி டவுலுகல, துணை ஆளுநர்/இலங்கை மத்திய வங்கி, திரு. டிலான் சிறிவர்த்தன, மூத்த உதவிப் பணிப்பாளர்/நி.உ.பி, திரு. டேவிட் ஷனோன், பணிப்பாளர் பரஸ்பர மதிப்பீடுகள்/ஆசிய பசுபிக் குழுமம், திரு. ஜுலியன் ப்ராஸோ, ஆசிய பசுபிக் குழுமத்தின் இணைத் தலைவர், ஒட்டாவிலுள்ள நிதியியல் துறை கொள்கை கிளையின் கனடா நிதித் திணைக்களத்தின் இணை உதவிப் பிரதி அமைச்சர், அதிமேதகு ஜனாதிபதி, திரு. ரணில் விக்ரமசிங்க, முனைவர்.

கோடன் ஊக், நிறைவேற்று செயலாளர்/ ஆசிய பசுபிக் குழுமம், திருமதி. இனோக்கா மொஹோட்டி, பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு, முனைவர். சுபானி கீர்த்திரத்ன, மேலதிகப் பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு, மற்றும் திருமதி. வங்கீஷா கருணாரத்ன, பிரதிப் பணிப்பாளர்/நிதியியல் உளவறிதல் பிரிவு.